தலைவி அவர்களுடைய ஆட்சியில் இதைச் செய்துதர முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வள்ளலாரை பெருமைப்படுத்துகின்ற வகையிலே ஆற்றிவருகின்ற பணிகளை இங்கே சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, பாராட்டுக்குரியவர்களை பெருமைக்குரியவர்களை பெருமைப் படுத்துவதில் நிலைத்த புகழுக்குரியவர்களாக மாற்றுவதில் அக்கறை உள்ள அரசாக இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலேயே புரட்சித் தலைவி அவர்கள் அரசுதான் செயல்பட்டு வருகிறது என்பதை இங்கே கோடிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, கோட்டம் அமைப்பதைப் பற்றியும், அவர் வாழ்ந்த இல்லத்தை நினைவு இல்லமாக்குவதைப் பற்றியும் நிதி நிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 75, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

75—

நாச்சியார்கோவில் மேல்நிலைப்பள்ளியில் தேர்வு மையம் ஏற்படுத்துதல்

*26942— **திரு. இராம. இராமநாதன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, திருவிடைமருதூர் ஒன்றியம், நாச்சியார் கோவில் மேல்நிலைப்பள்ளியில் தேர்வு மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) எப்பொழுது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1995 மார்ச் 20]

திரு. இராம. இராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை எளிய அத்துணைபேரும் கல்வியினைப் பெற்றாக வேண்டும் என்கிற நல்லெண்ணத்தோடு இன்றைக்கு தமிழகத்திலேயிருக்கின்ற கல்வித் துறையை சீர் செய்துகொண்டு இருக்கின்ற தமிழகத்தினுடைய காவல் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த புனிதமான நல்லாட்சியில் கிட்டடத்தட்ட கும்பகோணம் தொகுதியிலே இருக்கின்ற திருவிடைமருதூர் ஒன்றியத்தில் நாச்சியார்கோவில் பகுதியிலே படிக்கின்ற ஏழை எளிய மாணவர்கள் அத்துணை பேரும் அவர்களுடைய தேர்வினை எழுதுவதற்காக திருவிடைமருதூர் அதைப்போலவே கும்பகோணத்திற்கும் வருகின்ற ஒரு சூழ்நிலை நிலவுகின்றது. எனவே, அங்கே படிக்கின்ற அத்துணை பேரும் மிகவும் பிரச்சினையான அந்தச் சூழ்நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து அவர்களையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்கின்ற கோரிக்கையினை எங்களைக் காக்கின்ற காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களிலே பணிந்து வைத்து வேண்டுகிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு மீண்டும் பரிசீலனை செய்து, சென்ற ஆண்டு அறிவிக்க முடியாவிட்டாலும்கூட வருகின்ற ஆண்டிலே நிச்சயமாக அந்த வாய்ப்பினை கொடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் பேரவையின் முன்னனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அந்தப் பள்ளியிலிருந்து கருத்துரு பெறப்படாததால் பரிசீலிக்கப்பெறவில்லை. வரும் நிதியாண்டில் கருத்துருப் பெறப்பட்டால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மீண்டும் பரிசீலித்து இந்த ஆண்டு கருத்துரு பெற்று செய்வதாக சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளைச் செய்து கொடுப்பதோடு அந்தப் பகுதியில் படிக்கின்ற பெண்கள் அந்தப்

பள்ளியில் இடம் இல்லாமல், இன்றைக்கு உட்காருவதற்குகூட இடம் இல்லாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பெண்களுக்காக, அந்தப் பள்ளியில் உள்ள பெண்களைக் காக்கின்ற காவல் தெய்வத்தினுடைய இந்த நல்ல ஆட்சியில் சரி செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவினையும், பரிசீலனையையும் வழங்குவார்களா என மீண்டும் தயவு கூர்ந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலிருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும் எல்லா வசதிகளையும் உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தொலைநோக்குத் திட்டத்தோடு பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 76, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

76—

இடையஞ்சாத்து அரசு உயர்நிலைப்பள்ளிக்கு நிலம் ஒதுக்குதல்.

24790—திரு.* **கி. தருமலிங்கம்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, இடையஞ்சாத்து அரசு உயர்நிலைப்பள்ளி, ஒனறியத் துவக்கப்பள்ளியில் நடந்து கொண்டு வருவதால், அப்பள்ளிக்காக 4.90 ஏக்கர் பரப்புள்ள கிராம புலன் எண். 184/1 அரசு புறம்போக்கு இடத்தை வருவாய்த் துறையிலிருந்து கல்வித்துறைக்கு மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அணைக்கட்டு தொகுதி இடையஞ்சாத்து அரசு உயர்நிலைப்பள்ளிக்காக 4.90 ஏக்கர் பரப்புள்ள கிராம புல எண். 184/1 அரசு புறம்போக்கு இடத்தை, வருவாய்த் துறையிடமிருந்து, கல்வித் துறைக்கு நில மாற்றம் செய்வதான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது.